பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கலி 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 29 திங்கட்கிழமை (14-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 262

# பிராந்திய சபைகளை கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 14

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தாம் முதலில் வெளியிட்ட யோசனைகளில் உள்ள உருப்படியான ஒரு சில அம்சங்களையும் படிப்படியாக அரசாங்கம் வாபஸ் பெற்று வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக, உத்தேச அதிகாரப் பரவலாக்கல் அலகான பிராந்திய சபைகளை கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லை என்ற யோசனையையும் அரசு வாபஸ் பெற்றுவிட்டது.

அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் குறித்து நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்று முதலில் அறிவித்த அரசு, இணைப்பு இல்லை என்று பின்னர் கூறி தடம் புரண்டதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் கொழும்பு மாவட்ட 'வெண்தாமரை' இயக்க வழிகாட்டிகள் மத்தியில் உரையாற்றும் போதும் —

நேற்று ரூபவாஹினியில் உத்தேச தீர்வு யோசனை

[5 ஆம் பக்கம் பார்க்க]

# பிராந்திய சபைகளுக்கான அதிகாரம் போதாது என்கிறார் தொண்டமான்!

## "மலத்தியன்" தெளிக்கும் உரிமை கூட இல்லையாம்!!

கொழும்பு, ஓக. 14

அரசின் தீர்வுத் திட்டத்தின் கீழ் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரம் போதுமானது அல்ல என அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிராந்திய சபைகளுக்கு என வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு மறுபுறத்தால் மெல்ல எடுத்துக் கொள்ளக்கூடிய வசதிகள் அந்தத் தீர்வுத் திட்டத்தில் புகுத்தப்பட்டிருப்பதாக தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலத்தீன் தெளிக்கும் உரிமைகூட பிராந்திய சபைகளுக்கு இல்லை என்றும் தொண்டமான் குறிப்பிட்டிருக்கிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பேசாலையில் புலிகள் அதிரடித்தாக்கு! 2 பொலீஸார் பலி! மற்றும் சிலர் காயம்!!

சிறீலங்கா படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பேசாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதல் ஒன்றில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் மாலை 6.40 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பேசாலை பொலீஸ்— இராணுவ முகாமிலிருந்து 25 மீற்றர் வெளியே வைத்து விடுதலைப் புலிகள் பொலீஸார் மீது தாக்குதல் நடத்தினர் என்றும்—

இதில் கொல்லப்பட்ட பொலீஸாரைவிட ஏனையோர் காயங்களுடன் முகாமிற்குள் தப்பி ஓடினர் என்றும்—

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற மற்றும் சில பொலீஸார் மன்னார், அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# அதிசக்தி வாய்ந்த வெடி குண்டுடன் மஞ்சள் நிற வான் கொழும்புக்குள்!

## பொலீஸார் தீவிர தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 14

புலிகளின் தற்கொலைப் படையினர் அதிசக்தி வாய்ந்த வெடி மருந்துகள் கொண்ட மஞ்சள் நிற வானில் கடந்த 9 ஆம் திகதி தலைநகர் கொழும்புக்குள் நுழைந்துள்ளனர் எனக் கிடைத்த தகவல்களையடுத்து அந்த வானைத் தேடும் முயற்சியில் பொலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனியா தெரிவித்தார்.

இந்த வான் கொழும்பு நகருக்குள் நுழைந்தது பற்றிய தகவல்கள் முதலில் தேசிய புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்ததாம்.

வானின் சாரதிக்குப் பக்கத்திலுள்ள பெட்டிக்குள் ('டாஸ் போட்') குண்டு மறைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரிடம் சிக்கிய 17 பேர் நேற்று விடுவிப்பு

## ராணுவம் சித்திரவதை செய்ததாம்

யாழ்ப்பாணம், ஓக. 14

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கைகளின் போது படையினரிடம் சிக்குண்ட 17 ஆண்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் இந்தப் பதினேழு பேரையும் பலாலிப் பகுதியில் வைத்து படையினரிடமிருந்து பொறுப்பேற்றனர்; "ஹபரண" கப்பல் மூலம், காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பருத்தித்துறைக்கு அவர்களைக் கூட்டி வந்தனர்.

படையினரிடம் சிக்குண்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் தாங்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாக இந்தப் பதினேழு பேரும் தெரிவித்தனர். (உ-4)

# யாழ். வந்து கொண்டிருந்த 11 தமிழர் இடையில் கைது!

கொழும்பு, ஓக. 14

மேல் மாகாண சபை முதல்வரின் பணிமனை வாசலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பின் பின்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 11 தமிழ் இளைஞர்கள் ஈரப்பெரியகுளம் இராணுவத் தடை முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதி பொலீஸ் மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 11 இளைஞர்களும் கொழும்புக்கு கூட்டிவரப்பட்டுள்ளதாகவும் குண்டுவெடிப்பிற்கும் அவர்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்பது பற்றி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலீசார் தெரிவிக்கின்றனர்.

(உ-க-10)

# தேவாலயம் மீது விமானம் குண்டு வீசியது உண்மையே!

## சர்வதேச செஞ். பிரதிநிதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா வான்படை விமானம் குண்டுகளை வீசியதும், அதில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதும் உண்மையே என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் கொழும்புத் தலைமையகப் பிரதிநிதி மாரிக்கோ அல்தர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

"புலிகளின் குரல்" வானொலி இதனை நேற்றிரவு அறிவித்தது.

இது தொடர்பாக மாரிக்கோ அல்தர் கொழும்பில் மேலும் தெரிவிக்கையில் —

கடந்த மாதம் ஒன்பதாம் திகதி இராணுவ நடவடிக்கையின் போது நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் மக்கள் தஞ்சமடைந்தனர். அன்று அங்கு ஸ்ரீலங்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வெளியூர்களுக்கான 28 தபால் பொதிகள் கப்பலில் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 14

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பொருள்களுடன் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்த 'ஹபறண' கப்பலில் வெளியூர்களுக்கான 28 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சென்ற திங்கட்கிழமை உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களுடன் பருத்தித்துறைக்கு வந்து திரும்பிய 'ஹபறண' கப்பலில் அனுப்புவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட 18 தபால் பொதிகளையும் கப்பலில் ஏற்றுவதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்ததால் அவை பருத்தித்துறை தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

அத் தபால் பொதிகளும் நேற்று கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

# ராஜீவின் மகன் ராகுல் அரசியலில் குதிப்பார்?

## அதற்காக நாடு திரும்பினார்

புதுடில்லி, ஓக. 14

காலஞ்சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகனான ராகுல் காந்தி விரைவில் அரசியலில் குதிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக, அமெரிக்காவின் 'ஹவார்ட்' பல்கலைக் கழகத்தில் தனது படிப்பை முடித்துக் கொண்டு, அண்மையில் அவர் புதுடில்லி திரும்பியுள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தனது தந்தையின் தேர்தல் தலமான, அமேதி தொகுதியில் ராகுல் போட்டியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவரது அரசியல் பிரவேசம் காங்கிரஸ் அணியினரிடையே முரண்பட்ட கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளது.

அர்ஜுன்சிங் போன்ற மூத்த காங்கிரஸ் தலைவர்கள் இவரது வரவை ஆதரித்தாலும் பிரதமர் நரசிம்மராவ் இதனை அடியோடு வெறுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், ராஜீவின் சகோதரரான சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்தியும், தனது மகன் அருண்காந்தியை, அரசியலுக்குத் தயார்படுத்தி வருகிறார் எனத் தெரிகிறது.

(உ-எ)

# இளாலியில் கண்டெடுத்த அடையாள அட்டைகள்

இளாலி இறங்குதுறையில் கண்டெடுக்கப்பட்ட பல அடையாள அட்டைகள், பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. கயிலாயப்பிள்ளை விக்கினேஸ்வரன், புதுமடம் உடுவில் தெற்கு, மானிப்பாய். அ. அ. இல. 652572804V
2. மருசலீன் லெற்றிற்றா, நீதிமன்ற வீதி, மல்லாகம். அ. அ. இல. 555921756V
3. செல்லத்துரை ஜெயந்தி கணுக்கேணி மேற்கு, தண்ணீரூற்று. அ. அ. இல. 627092300V
4. முருகுப்பிள்ளை தங்கவேல், 2ஆம் யூனிற், பேராறு கந்தளாய்.
5. வேலுப்பிள்ளை நவமணி பட்டியடிச்சேனை, கல்குடா. அ. அ. இல. 627503318V
6. சிவக்கொழுந்து இராசையா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. அ. அ. இல 448250431V
7. கந்தையா கலைவாணி, டச் வீதி, சாவகச்சேரி. அ. அ. இல. 617171678V
8. மரியா மக்கலின் சின்னப்பு, வளன்புரம், கொழும்புத்துறை. அ. அ. இல. 407040210V
9. ஆனந்தன் வீராசாமி. செப்பல் வீதி, யாழ்ப்பாணம், அ. அ. இல. 705110263V
10. சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை, நீதிமன்ற வீதி, மல்லாகம். அ. அ. இல. 276480324V

உரியவர்கள் இவற்றை ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார். (எ)

## தொலைக் கல்வி ஆசிரியருக்கு

பருத்தித்துறை தொலைக் கல்வி நிலையத்தின் (1993/1995) ஆசிரிய மாணவர் குழுவுக்கும் ஆங்கில மாணவர் குழுவுக்குமான தொடர் அமர்வு இன்று முதல் வெள்ளிக்கிழமை வரை 5 நாட்களுக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-173)

# நாட்டை அதிகாரப் பரவல் மூலம் பிரிப்பதற்கு அனுமதிக்க முடியாது!

## ஐ.தே.க. பிரமுகர் சுசில் முனசிங்க அறிவிப்பு

கொழும்பு, ஓக. 14

இனப்பிரச்சினை தீர்வு யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேல்மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியுமான சுசில் முனசிங்க கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அவர் கூறியிருப்பதாவது:-

அரசின் தீர்வு யோசனைகள் பூரணத்துவமுடையவை அல்ல. தனது யோசனைகளில் அதிகாரப் பரவலாக்கலை அரசு சரியாக விளக்கவில்லை.

தவிர, இந்தத் தீர்வு யோசனைகள் அரசு இதுவரை உத்தியோகபூர்வமாக எமது கட்சிக்கு — ஐ.தே.கவுக்கு — சமர்ப்பிக்கவில்லை. இதனால் நிலைமை தெளிவில்லாமல் இருக்கிறது. எமது கட்சியின் நிலைப்பாட்டையும் வெளியிட முடியாதிருக்கிறது.

அரசின் யோசனைகளில் வடக்கு — கிழக்கு இணைப்பு பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த தினமொன்று அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பௌத்த குருமாரின் பொதுச் சபையான சங்கசபாவுக்குச் சமர்ப்பித்த யோசனைகளில் வடக்கு — கிழக்கு இணைப்புக்கு தாங்கள் எதிரானவர்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

எனவே அரசின் யோசனைகளில் முன்னுக்குப்பின் முரண்பாடான நிலை காணப்படுகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துவிட்டு நாடாளுமன்றத்திற்கு மீண்டும் அதிக அதிகாரங்களை வழங்கப்போவதாக உறுதியளித்த ஜனாதிபதி — தமது வாக்குறுதிக்கு முரணாக — நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறித்து அதனை அதிகாரமற்ற ஒரு நிறுவனமாக்கும் —யோசனைகளை இப்போது வெளியிட்டிருக்கிறார்.

எனவே அதனை எமது கட்சி சாதகமாக நோக்க இயலாதிருக்கிறது. அதனை நாம் பூரணமாக நிராகரிக்கிறோம்.

எனினும் அதிகாரப் பரவலாக்கலுக்கு எமது கட்சி எதிரானதல்ல.

ஆனால் அதன் மூலம் நாட்டைப் பிரிக்க வழிகோலப் படுமாயின் அதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது — என்றார்.

அரசு வெளியிட்டுள்ள தீர்வு யோசனைகளுக்கு ஐ. தே. க. ஆதரவு தரக்கூடாது என அக்கட்சியின் தலைமைப்பீடத்துக்கு சுசில் முனசிங்க உட்பட — ஒரு பகுதி உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்து வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ-4-6)

# புலிகள் பெயரைக் கூறி கொள்ளையிட்ட சிங்களவர்!

கொழும்பு, ஓக. 14

தாங்கள் புலிகள் எனக்கூறி பதவிய மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் வீட்டில் கொள்ளையிட்ட மூன்று சிங்களவர்கள் நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது முறைப்பாட்டாளரால் அடையாளம் காட்டப்பட்டனர்.

தாங்கள் தமிழ்ப்புலிகள் எனக்கூறிக் கொண்டு வீட்டிற்குள் புகுந்த இவர்கள் வைத்திய அதிகாரியின் கணவனை அச்சுறுத்தி கத்தியால் குத்திக் காயப்படுத்தியதுடன் 11 ஆயிரம் ரூபா பணத்தையும் 54 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரையும் இம்மாதம் 15 திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஒ-10)

# அரசின் யோசனைகளால் தேசிய அனர்த்தம் வரும்

## வாபஸ் பெறக் கோருகிறார் தினேஷ்

கொழும்பு, ஓக. 14

அரசு தற்போது முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள், ஒற்றையாட்சியை ஒழித்து, சமஷ்டி அரசு ஒன்றை அமைப்பதன் வாயிலாக தேசிய அனர்த்தம் ஒன்றுக்கு வழி வகுக்கும்.

இவ்வாறு அரசை எச்சரித்திருக்கிறார் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன.

தினேஷ் குணவர்த்தன வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள், தேசிய அளவில் பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்பதால், அந்த யோசனைகளை அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

பாதுகாப்புப் படையினர் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே தமது உயிர்களைத் தியாகம் செய்கிறார்களே யன்றி, சமஷ்டி அரசொன்றை உருவாக்க அல்ல.

ஒற்றையாட்சியை ஒழிக்க முயலும் அரசின் யோசனைகளால், தவறான வழியில் செல்ல வேண்டாம் என்று மக்களைக் கோருகிறோம்.

ஒற்றையாட்சி வரையறைக்குள், மாவட்ட ரீதியில் அதிகாரத்தைப் பரவலாக்குவதை மட்டுமே எமது கட்சி ஏற்கும்.

அரச காணி, பொலிஸ், நீதித்துறை, கல்வி அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படக்கூடாது.

தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடமாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் மீண்டும் பிரித்துவிட வேண்டும். (ஒ-எ)

# நல்லூரில் வைப்பகம் சிறப்பாக இயங்குகிறது

தமிழீழ வைப்பகம் நல்லூரில் ஆரம்பித்துள்ள விழாக்கால பணியகத்தில் மக்கள் ஆர்வத்துடன் தமது கணக்குகளை ஆரம்பித்து வருகின்றனர்.

வைப்பகத்தின் பலன் பாமர மக்களுக்குக் கிடைக்க வழி செய்யும் நோக்கிலும்—

மக்களுக்கு சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் நோக்கிலும்—

ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விழாக்கால பணியகத்தில் நேற்று வரை ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் சேமிப்புக் (தேட்ட) கணக்குகளையும், பத்துக்கு மேற்பட்டவர்கள் நிலையான வைப்புக்களையும்— ஆரம்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

பாமர மக்கள் இந்தப் பணியகத்துக்கு வந்து வைப்பகத்தின் நன்மைகள் குறித்து கேட்டறிந்து வருவதாகவும்—

சேமிப்புப் பழக்கம் பற்றி அவர்களுக்கு விளக்கப்படுவதாகவும்—

வைப்பக முகாமையாளர் தெரிவித்தார். [உ-3]

## முதலுதவி வகுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். கோட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ள — மாணவர்களுக்கான — முதலுதவி வகுப்பு திட்டமிட்டபடி இன்று காலை 8.30 மணிக்கு நியூமாஸ்ரர் கல்வி நிலையத்தில் ஆரம்பமாகும் என்று ஒன்றியம் அறிவித்துள்ளது.

(உ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 14

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தரிசிப்பாளர்கள், மேற்பார்வை குடும்பநல சேவையாளர் மற்றும் மானிப்பாய் — சங்கானைப் பகுதிகளுக்கான இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு பொறுப்பாகக் கடமையாற்றும் குடும்பநல சேவையாளர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 00 மணிக்கு மேற்படி பணிமனையில் இடம்பெறவிருப்பதாக பணிமனையின் பொறுப்பதிகாரி திரு. து. மகாதேவன் அறிவித்துள்ளார்.

[உ]


உ

முருகன் துணை

கொக்குவில்

மாத்தனைக் கந்தசுவாமி கோவில்

பரிபாலன சபை

குருக்கள் தேவை

மேற்படி கோவிலுக்கு நித்திய பூசை செய்வதற்கும், மற்றும் நைமித்திக, காமிய கிரியைகள் செய்வதற்கும், தகுதியுள்ள சிவாச்சாரியர் தேவை. வதிவிட வசதியும் உண்டு. தகுதி உடையோர், 21-8-95க்குப் பிந்தாமல், எழுத்து மூலம் போதிய நற்சான்றுகளுடன் சபைத் தலைவருக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பித்தவர்கள், 23 - 08 - 1995 புதன்கிழமை காலை 9-00 மணிக்கும், 12-00 மணிக்கும் இடையில் கோவில் அலுவலகத்தில் சமூகம் தரவும்.

இங்ஙனம்
பரிபாலன சபை

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[88026]



31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 29 — 01 — 1930



மறைவு: 16 — 07 — 1995

திருமதி
வள்ளிப்பிள்ளை குணரத்தினம்

பருத்தித்துறை, இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. நா. குணரத்தினம் அவர்களின் அன்புப் பாரியார் திருமதி வள்ளிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியை அன்னாரது இல்லத்தில் இன்று (14-8-95) நண்பகல் 12. 00 மணியளவில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்ச்சியிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நா. குணரத்தினம்
குடும்பத்தினர்

"கைலாஸ்"
2 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(38025)

### பரீட்சை கட்டணம் ஏற்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஓக.14

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான பரீட்சைக் கட்டணம் யாழ். பிரதம தபால் நிலையத்தில் தற்சமயம் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும்—

பரீட்சார்த்திகள் நாளை 15 ஆம் திகதி வரை கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கே தபால் பொதிகள் வர மேலும் கால தாமதமாகும் நிலை

## முப்படையினரும் சோதனையிட பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

வடபகுதிக்கு வரும் தபால்களை கடற்படையினருக்கு மேலதிகமாக பொலீஸ் இராணுவம் மற்றும் விமானப்படையினர் கூட்டாக சோதனையிட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனால் தபால் பொதிகள் இங்கு வந்துசேர்வதில் மேலும் நீண்ட காலதாமதம் ஏற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதகாலத்துக்கு மேலாக வெளிமாவட்ட வெளிநாட்டு தபால் பொதிகள் எதுவும் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படாததை அடுத்து குடாநாட்டு மக்களின் வெளித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப் பட்டுள்ளன.

தங்கள் உறவினர்கள் குடும்பத்தவர்களின் கடிதங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் பொது மக்கள் இதனால் விசனமும், விரக்தியும் அடைந்துள்ளனர்.

சோதனை என்ற பெயரில் தபால் பொதிகளை வடக்கே அனுப்புவதை திட்டமிட்டு படையினர் இழுத்தடித்து வருவதால் தபால் சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

தபால் பொதிகளை சோதனையிடுவது தொடர்பாக கொழும்பு தபால் திணைக்கள அதிகாரிகளுக்கும், கடற்படையினருக்கும இடையே இழுபறி நிலை ஏற்பட்டதை அடுத்து சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதிகள் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேக்கமடைந்தன.

தபால் பொதிகளை கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்குமாறு இங்குள்ள அதிகாரிகள் பலர் பலமுறை கோரிக்கைகளை விடுத்தும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை.

இதுவரை 70 பொதிகள் மட்டுமே சோதனையிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வடபகுதிக்கான கப்பல் சேவை தடைப் பட்டுள்ளதால் அவற்றைக்கூட இங்கு எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச சடாட்சரநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடிதங்களைப் பிரித்துச் சோதனையிடும் பணி ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை—

தாண்டிக்குளம் ஊடாகச் செல்லும்பயணிகள் தம்முடன் எடுத்துச் செல்லும் கடிதங்களை படையினர் பறித்து எடுப்பதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு பறிக்கும் கடிதங்களை படையினர் பயணிகள் மூலம் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அனுப்புவதாகவும் அறிய வந்தது. (ஐ-4)

# தீர்வு யோசனையைக் கைவிடும்படி 27 சிங்கள அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு, ஓக. 14

"அதிகாரப் பரவலாக்கல் தீர்வால் சமஷ்டி அரசு ஒன்று உருவாகும். இதனால் முடிவேயற்ற எல்லைப் பிணக்குகள் தோன்றி நாட்டுக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்படும்."

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், ஸ்ரீலங்கா தேசப் பிரேமி பிக்கு பெரமுன, சிங்கள சட்டத்தரணிகள் சங்கம் முதலிய 27ஸ்தாபனங்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முழுத் தீர்வு ஆலோசனைகளையும் கைவிடும்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகளை அமுல்படுத்தினால் நாடு 8 பிராந்திய அரசுகளாகப் பிளவுபடும். தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்இந்த முயற்சியில் நாட்டின் இதர பாகங்களும் 7அரசுகளாகப் பிரிக்கப் படும். இதனால் சிங்களவர் மத்தியில் பிரிவுகளும் நிர்வாகத்தில் குழப்பமும் ஏற்படும்.

இந்தியாவிலிருந்து தமிழர் இங்கேகுடியேறுவதும், ஆயுதங்கள் வருவதும் நடைபெறும் எனவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-ஸ]

### பசளைகள் மீதான தடை:

## விவசாயத்தை திட்டமிட்டு பாதிக்கும் செயலாகும்

யாழ்ப்பாணம் ஓக. 14

வடபகுதி மீது அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அசேதனப் பொருள்களின் மீதான தடையானது திட்டமிட்ட முறையில் யாழ். குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கும் ஒரு முறையாகும்.

இவ்வாறு, கோப்பாய் வடக்கு மத்தி விவசாய சம்மேளனம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு விவசாயிகளின் சார்பாக, அவர்கள் எதிர் நோக்கும், அவர்களின் வாழ்வைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினையாக அமைந்துள்ள அசேதனப் பசளை மீதான தடை தொடர்பாக இம் மகஜர் எழுதப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

1990ஆம் ஆண்டு முதல் அரசினால் விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை விவசாய உற்பத்தியைப் பாதித்து இங்கு வாழும் 95 ஆயிரம் விவசாயக் குடும்பங்களையும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது விவசாய உற்பத்திக்கானமுக்கிய உள்ளீடான அசேதன உரங்கள் மீது விதிக்கப்பட்ட தடை உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இவ்வாறு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி விவசாயப் பொருள்களின் சந்தை விலையை உயர்த்தி நுகர்வோரையும் பாதிப்பிற்குள்ளாக்கி உள்ளது.

அத்துடன் "அமோனியம் சல்பேற்" பசளையில் இருந்து எதுவித வெடிப்பொருள்களும் தயாரிக்க முடியாது என இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளதாகவும் —

இதனால், அரசு விதித்துள்ள உரப்பசளைகள் மீதான முழுமையான கட்டுப் பாட்டிற்கான பகுத்தறிவு காரணங்களை ஜீரணிக்க முடியாது உள்ளதாகவும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [ஓ-எ]

### இராணுவ நடவடிக்கையின்போது

## சந்திரிகாவை ஏமாற்றிய முரண்பாடான தகவல்கள்

கொழும்பு. ஓக. 14

கடந்த மாதம் இதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற காலம்.

ஜூலை 11 ஆம் திகதி இராணுவம் புதிதாகக் கைப்பற்றிய பிரதேசங்களை அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேரில் பார்வையிட்டுத் திரும்பினார்.

கொழும்பு, திரும்பி இராணுவம் பெரு வெற்றியீட்டியதாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அறிவித்தார்.

ஆனால் அடுத்த நாளே இராணுவம் முன்னேறியது குறித்து முரண்பாடான தகவல்கள் கிடைத்ததாம்.

இது குறித்து சரியான நிலைப்பாட்டை அறிவதற்கு அமைச்சர் ரத்வத்தையை அனுப்ப விரும்பாத சந்திரிகா—

தனது நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவரான அமைச்சர் சிறிபால டி சில்வாவை யாழ்ப் பாணம் அனுப்பினார்.

அவர் சண்டிலிப்பாய் வரை சென்றுவிட்டு இராணுவம் முன்னேறியதை ஜனாதிபதிக்கு ஊர்ஜிதம் செய்தார்.

அதனைத் தொடர்ந்தே கைப்பற்றிய பகுதியில் சிவில் நிர்வாகத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இராணுவத்தை விரட்டிய செய்தி உயர் பீடத்துக்குக் கிடைத்துவிட்டதாம். மனம் சோர்ந்த நிலையில் ஜனாதிபதி தமது உத்தரவுகளை ரத்துச் செய்தார் என்று அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தி புலிகளை வெல்ல முடியும் என்று அமைச்சர் ரத்வத்தையே ஜனாதிபதிக்கு நம்பிக்கை ஊட்டியதாகவும்—

ரத்வத்தைக்கு பிரதமர் சிறிமாவோ பண்டார நயக்கா பக்கபலமாக இருந்தார் என்றும் — இப்போது தகவல்கள் வெளியாகி உள்ளன. [அ-154]

### புலிகளின் குரல் வானொலியில்

**14 – 08 – 1995**

**திங்கள் இரவு**

★ 8-02 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம்— எழுத்தாளர் திருமதி தாமரைச்செல்வியுடனான செவ்வி

**15 – 08 – 1995**

**செவ்வாய் காலை**

★ 7-02— மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

**திங்கள் மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதினவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5 30— மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15— விளையாட்டுச் செய்திகள்
★ 6·20 — நேயர் நெஞ்சம்

### தற்கொலை நபர் கொழும்பிலாம்

கொழும்பு, ஓக.14

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச்சேர்ந்த சுப்பிரமணியம் சாந்தகுமார். முக்கியஸ்தர் ஒருவரை கொலைசெய்வதற்காக கொழும்பு வந்துள்ளராம்.

பொலீஸ் தலைமையகம் இப்படி அறிவித்துள்ளது. அவரது புகைப்படமும் வெளியிடப்பட்டுள்ளது. [இ-ஐ]

### நல்லூர் சூழலில் இன்று

நல்லூர் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பதினாலாம்நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றிலில் — மாலை 6 மணி முதல் 7 மணிவரை ராதிகா சுப்பிரமணியம் பாட்டு.

7 மணி முதல் 8. 30 மணி வரை திரு. வி. கே. கானமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசை.

★ நல்லை ஆதீனகலா மண்டபத்தில் — திருமுறை வழிபாடும், பயிற்சி நெறி வகுப்புகளும் — காலை 8 30 மணி தொடக்கம் 12 மணி வரை

பண்டிதர் மு. கந்தையா "சைவப்பழக்கங்களும் கோயில் வழக்கங்களும்" — உரை

சிறப்புக் கலாநிதி ஆ. சிவரத்தினம் "தேர் அமைப்பு — சொந்த அனுபவங்கள்" — உரை

★ நல்லைஆதீனகுருமூர்த்த மண்டபத்தில் — பி. ப. 3. 00 மணிக்கு சிவத் தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை — "திருவாசகம்"

★ மேற்குவீதியில் ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—

மாலை 5 30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் "விஷ்ணு பாகவதம்" தொடர் இசைப்பேருரையில் "பரசுராமாவதாரம்". (எ-30-111)

### நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## பகைமைகள் ஒழிந்திட அருள்!

தாளம்: ஆதி    ராகம்: கல்யாணி

*பல்லவி*

பக்தர் குறை தீர்க்கும் திருமுருகா — எங்கள்
பகைமைகள் ஒழிந்திட அருள் புரிவாயா

*அனுபல்லவி*

நித்தம் நித்தம் பகையால் செத்து மடிகிறார்
நீதிகளை மறந்து ஆவிகளைப் பறிக்கிறார்

*சரணம்*

குண்டு மழை எம் மண்ணில் பொழியுதே — இங்கே
கொடியவர் கொடுமையால் உடைமைகள் அழியுதே
கண்டும் நம் துன்பமதை போக்கிட — நம்
கருணைக்கடலே கண் திறந்து பாராயோ.
வீரப்புலிப்படைகள் வென்றிடச் செய்வாய் — நம்
வேதனையாவுமே நீங்கிட அருள்வாய்
பாரினில் ஈழம் மலர்ந்திட அருள்வாய் — பைந்
தமிழர் அடிமை விலங்குடைக்க வருவாய்.

-போராளி அமரேசன்

### நல்லூரான் அருள்வான் நம்பு!

"செல்" வந்து துயருற்று எம்மக்கள்
அல்லலுற்று அலைகிறா் அகதிகளாய்
அல்லல் நீங்கி ஆனந்தமாய் வாழ
நல்லை நகரானே அருள்.
நல்லூர்என்றால் நலம் பெருகும்
அல்லல் நீங்கும் ஆனந்தம்மிகும்
கல்வியொடு செல்வம் களிப்பான வாழ்வு
நல்லூரா னருள்வான் நம்பு.

சங்கரத்தை சி.சபாநாதன்

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

5½ குதிரை சக்தி [H. P.] கொண்ட பெற்றர் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. கந்தசாமி, 82/7, 3ஆம் லேன், பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். [8635]

யமஹா (Yamaha)EF 2000 H. K 1.4 K. W. புதிய ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு. ''கோமதி'' சித்தன் கேணி. (38003)

குறைந்த விலையில் தேவையான அளவு இரண்டாம் தரத் தேங்காய்ப் பிண்ணாக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வீரசிங்கம், முருகன் எண்ணெய் ஆலை, மருதடி மேற்கு, சாவகச்சேரி. [38022]

நல்ல நிலையிலுள்ள C 90 [HO2] மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. ஸ்கந்தகுமார், விவசாயப் பாடசாலை முன்பாக. பலாலி வீதி, திருநெல்வேலி. [38016]

நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ந. லாகீசன் 639/1, நாவலர் வீதி, நல்லூர். (38015)

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

புதிய பழைய பாவனைக்கு உதவாத தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. மருதம், 66, மணிக்கூட்டு கோபுர வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [38011]

### சனி [வக்கிர] மாற்றம்

9-8-95 சனி மாற்றம் விற்பனையாகிறது. ரூபா 10/- பாடசாலை அலுவலக உபகரணங்கள், இந்திய, இலங்கைச் சஞ்சிகைகள், வாழ்த்துக்கள், பத்திரிகைகள் விற்பனைக்கு உண்டு. ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/13, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். [8636]

### வைபவ மாலை

யாழ்ப்பாண வைபவ மாலை ஆக்கம்: முதலியார் குல. சபாநாதன் பல பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் விலை 50/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம், நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன்கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. [சி-2036]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

அரியரத்தினம் யோன் ராஜ்குமார் என்பவரது அடையாள அட்டை [இல. 682963409V] ஒரு தொகைப் பணத்துடன் பேர்ஸ் என்பன கைதடிப் பாலத்தடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்: திரு. க. பத்மநாதன் மே/பா க. யோகநாதன், மல்வம் உடுவில் எனும் முகவரியில் சான்றைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (38012)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண தமிழ் கிறிஸ்தவ பெற்றோர் தமது மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகிறார்கள். மணமகளின் வயது 28. உயரம் 5'2'' பொது நிறம். அழகும் அடக்கமும் நிறைந்தவர். A/L பரீட்சையில் சித்தி அடைந்தவர் தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு இல. 976 மே/பா உதயன் (8631)

### வெற்றிக்கனி — 3

வெற்றிக்கனி — பகுதி - 3 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: பொன் சக்திவேல். விலை ரூபா 60/- விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன் கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. (சி-2037)

### பொருளியல்

பொருளியல் 6 விடயங்கள், கேள்வி கோட்பாடு, நிரம்பல் கோட்பாடு, நெகிழ்ச்சி கோட்பாடு, சந்தைச் சமநிலை, உற்பத்திக் காரணிகள், வருமான வட்டப்பாச்சல். ஆக்கம்: எம். ஐ. ஜாபிர், விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1998)

### மலிவு விற்பனை

ஆகஸ்ட் - 07 தொடக்கம் மருத்துவ, விஞ்ஞான வணிகத்துறைகளை சேர்ந்த ELBS நூல்களும், இதர நூல்களும் மலிவு விலையில் விற்கப்படும். யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1725]

### விற்பனையாகின்றது

செங்கை ஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் அனைத்தையும் மலிவு விலையில் நல்லூர் உற்சவ தினங்களில். நல்லூர் ஆலய வீதியிலுள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (37994)

**தனியார் தொழில் பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம்**

*(யாழ். மாவட்டம்)*

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)

காலம்: 16 - 08 - 1995 (புதன்) 12.00 மணி

விடயம்: தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு தொடர்பாக அரசியல் துறை நிதிப் பொறுப்பாளர் கலந்துரையாட உள்ளார்.

குறிப்பு:

மேற்படி கூட்டத்திற்கு நிறுவன உரிமையாளர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினர்.

(சி-2050)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08 — 08 — 1936 | 15 — 07 — 1995 |

**அமரர் சிவரத்தினம் விஜயசிங்கம்**

(இளவாலை வடக்கு)

திதி; 14 - 08 - 1995

எங்கள் குடும்பத் தலைமகனே எங்களை நீ
தாயாய் அரவணைத்துத் தந்தையாய்க் காப்பாற்றி
எல்லாமே நீயாய் ஏற்ற துணையாயிருந்தாய்
உன்னை இழந்து உள்ளம் துவழ்கின்றோம்
எந்நாளும் உங்கள் நினைவிலே வாழ்கின்றோம்
நீங்கள் இறைவன் திருவடியில் அமைதி பெறத்
தொழுகின்றோம்.

அன்புச் சகோதரிகள்,
மைத்துனர், மருமகள்.

''பகவான் கடாட்சம்'',
இளவாலை வடக்கு,
இளவாலை.

[38006]


# உபதபால் அதிபர்களுக்கு 1996 இல் நிரந்தர நியமனம்

தற்போது உபதபால் அதிபர்களாக கடமையாற்றி வருவோரின் நியமனங்கள் அடுத்த ஆண்டு முதல் நிரந்தரமாக்கப் படவுள்ளது.

சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின் இவர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படும்.

இதற்கான தீர்மானம் அண்மையில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி உதவி அஞ்சல் அதிபர் தரம் 2இல் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் அதே அளவு சம்பளம் இவர்களுக்கும் வழங்கப்படும்.

அவர்களுக்கு வழங்கப்படுவது போன்றே சம்பள அதிகரிப்பையும் இவர்கள் பெறுவர்.

அத்துடன் இடமாற்றம் இன்றி ஆரம்பத்தில் நியமிக்கப்படும் இடத்திலேயே தொடர்ந்தும் பதவியில் இருக்கவும் வகை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விசேட பொலீஸ் குழுவால் பெண் உட்பட ஐவர் கைது

கொழும்பு, ஓக. 14

மேல் மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட பொலீஸ் குழுவினர் நான்கு தமிழ் இளைஞர்களையும் பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இதனை அடுத்து விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர்கள் குண்டை வெடிக்க வைத்த தற்கொலைப் படையினரான குமார் மற்றும் அவரின் உதவியாளர்களுக்கு பல தடவை புகலிடம் அளித்துள்ளனர் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ]

# சம்பளம் போதாது என்று படையினர் ஆட்சேபனை

கொழும்பு, ஓக. 14

தமக்கு வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லை என்று சிப்பாய்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

மொத்தமாகத் தாம் பெறும் சம்பளத்தில் பெரும்பாலும் வெவ்வேறு கொடுப்பனவுப் படிகளே அடங்கியுள்ளன என்றும் —

எனவே தாம் சேவையில் இருந்து ஓய்வு பெற்றதும் ஓய்வூதியமாகக் கிடைக்கும் பணம் வாழ்க்கைச் செலவுக்கு போதுமானதாக இல்லை என்றும் ஸ்ரீலங்கா சிங்க ரெஜிமெண்டைச் சேர்ந்த சிப்பாய்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சம்பளத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு அவர்கள் ஜனாதிபதியை கோரியிருப்பதாக ''லங்காதீப'' செய்தி வெளியிட்டுள்ளது [ஐ-10]

# மாணவருக்கு போர்க்கால முதலுதவி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஓக. 14

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான போர்க்கால முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் இன்று திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

இன்று பின்வரும் இடங்களில் முதலுதவிப் பயிற்சி வழங்கப்படும்.

★ காலை 8 30 மணி — நியுமாஸ்ரர் கல்வி நிறுவனம்.

★ முற்பகல் 9 மணி — தொழில்நுட்பக் கல்லூரி.

★ மு.பகல் 9 30 மணி — வேலணைசேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.வி.

— விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று பின்வரும் இடங்களில் முதலுதவி வகுப்புகள் நடைபெறும்.

★ இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில்—

சுப்பிரமணிய வித்தியாலயம், புங்குடுதீவு ம. வி., கணநிதி தியாகராஜா ம.வி. பாடசாலை மணவர்களுக்கு

★ இன்று காலை 10.30 மணிக்கு ஸ்ரீ பார்வதிவித்தியாலய மண்டபத்தில்—

கனகரத்தினம் ம. ம. வி. ஸ்ரீ பார்வதி வித்தியாலய மாணவர்களுக்கு.

★ இன்று காலை 10-00 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலய மண்டபத்தில் —

இந்து மகளிர் கல்லூரி பெரியபுலம் ம.வி மாணவர்களுக்கு.

★ இன்று காலை 9-30 மணிக்கு புனிதமரியாள்வித்தியாலய மண்டபத்தில்.

வேம்படி மகளிர் கல்லூரி, புனித மரியாள் வித்தியாலயம் [ஓ எல். ஆர்], புனித கன்னியர்மட ம வி, புனித கன்னியர்மட ஆங்கில ம. வி. மாணவர்களுக்கும். (எ)

# கொலையில் சிப்பாய்க்கு தொடர்பு

கொழும்பு, ஓக. 14

அண்மையில் கொழும்பில் நடந்த லக்ஷ்மி குணவர்த்தன என்ற பெண்ணின் கொலை தொடர்பாக, இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மின்னேரியா இராணுவப்பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளராக இருந்த சமயம் அங்கு வைத்து கைதானார்.

இக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். [எ]


## ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி

**ஆரம்பம்: 03 - 09 - 1995**
**விண்ணப்ப முடிவு: 18 - 08 - 1995**

விண்ணப்பப் படிவத்தினையும், விவரங்களையும வார நாட்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி.

(37992)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இப்போதே குலை நடுக்கமா?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் பின்னிற்கவில்லை என்று பறை சாற்றுவதற்காகத் தாம் வெளியிட்ட யோசனையின் முக்கியமான உள்ளாந்தரத்தை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தாமே வாய் திறந்து கூறி விட்டார்!

இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்று, கண்டியில் வைத்து சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

அரசின் தீர்வு யோசனையை அவர் இம்மாதம் மூன்றாம் திகதி வெளியிட்டார். இலங்கை ஒற்றையாட்சி அரசு என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்று மாற்றப்படும் என்று அந்த யோசனையில் கூறப்பட்டது.

இந்த மாற்றம் நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு ஒப்பானது. சமஷ்டி என்பது பிரிவினையின் முதற்படி. எனவே இது சிங்களவர்களின் ஒரே நாடு என்ற அபிலாசையை குழிதோண்டிப் புதைத்துவிடும்— என்று பௌத்த குருமாரின் அமைப்புகளும், சிங்கள அடிப்படைவாத— தீவிரவாத அமைப்புகளும் எதிர்ப்புக் குரல் கொடுத்தன.

அவற்றைக் கேட்டதும், தமது அரசியலுக்கும், அரசுக்கும்ஆபத்து வந்துவிடும் என்று பயந்து, பத்து நாள்களிலேயே யோசனையின் முதுகெலும்பு எனக் கருதப்பட்ட ஆட்சி முறை அம்சத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டார் சந்திரிகா அம்மையார்!

இந்த வருட இறுதிக்குள் போரை முடித்துக் கொண்டு அதன் பின்னரே, இந்த யோசனையின் அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றை அமுல் செய்வது — இல்லை, இல்லை, திணிப்பது — என்பது சந்திரிகா வகுத்துள்ள கால அட்டவணையாகும்.

இந்தக் கால அட்டவணையை எட்டுவதற்கு முன்னரே சந்திரிகாவுக்கு குலை நடுக்கம் பிடித்து விட்டது. அதனால் அரசின் தீர்வு யோசனையின் வடிவம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் போவதற்கு முன்னரே கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிடும்!

இந்தவரிசையில் இன்னும் பத்து நாள்களில் அரசியல் தீர்வின் இறுதி வடிவத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு அம்சம் ரத்தாகிவிடும் என்று சந்திரிகா அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு, பெரும்பான்மையான மக்களின் ஆதரவு கிடைத்தால் மட்டுமே அது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று அனுருத்த நாடாளுமன்றத்தில் கூறியதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆகையால் அரசின்உண்மையான, இறுதியான அதிகாரப் பரவலாக்கல் வடிவம், பின்னோக்கி வட்டம் போட்டு இப்போதுள்ள மாகாண சபையைவிடக் குறைந்த மட்டத்துக்குக் கீழிறங்கி வரும் என்று எதிர்பார்க்கலாம்.

## பாதுகாப்பு நிதி செலுத்தும் நாள் மாற்றம்

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி செலுத்துவதற்கென நிதிப் பிரிவினால் அறிவிக்கப்பட்ட நிலையங்களில் ஒன்றான —

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடங்கும் நாவற்குழி, கோவிலாக் கண்டி, கேரதீவு வீதியிலுள்ள போராளிகள் குடும்ப நலன் காக்கும் அலுவலகத்தில் —

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப. 9 மணி தொடக்கம் 11 மணி வரை நிதியை செலுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

நேற்று வெளிவந்த அட்டவணையில் வெள்ளி, சனிக்கிழமைகளில் நிதி செலுத்தலாம் என்று இருந்தது மாற்றப்பட்டுள்ளது. (அ)

## கப்பலில் அனுப்பப்பட்ட பொருள்கள் மாயம்!

யாழ்ப்பாணம், ஒக. 14

வலிகாமம், தீவகக் கோட்ட கூட்டுறவுச் சங்கங்களால் "மாஹோ" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள பொருள்களில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களுள் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் குறைந்துள்ளன. லக்ஸ்பிறே, அங்கர் பால்மா, மல்லி, பருப்பு, சீனி, சவர்க்காரம் ஆகிய பொருள்களே சூறையாடப்பட்ட பொருள்களாகும். அத்துடன் தீவகக் கூட்டுறவு ஒன்றியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பால்மா, மீன் டின் என்பனவும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு படையினரே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## தேசிய பாதுகாப்பு நிதி: பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 14

வடமராட்சிக் கோட்டத்திற்கான — தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி திரட்டலுக்கான — கலந்துரையாடல்கள் நாளை மறுதினம் நடைபெறவிருப்பதாக தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான கலந்துரையாடல் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபத்திலும்—

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கான கலந்துரையாடல் மாலை 3.00 மணிக்கு யாழ் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்திலும் —

வடமராட்சிக் கோட்டத்தில் உள்ள சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளுக்குமான கலந்துரையாடல் மாலை 3.00 மணிக்கு திரு இருதயக் கல்லூரியிலும்—

நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த மக்கள் தங்க 3 பாடசாலைகள்

தென்மராட்சி, ஒக. 14

கடந்த மாதம் இடம்பெற்ற 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின்போது தமது வீடுகளை இழந்து தென்மராட்சிப் பகுதியில் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் தற்போது இப் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வரணி மகாவித்தியாலயம், மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ஆகிய இடங்களில் சுமார் 600 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தினமும் தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை வரணி இயற்றாலையில் ஆயிரம் குடிசை வீடுகள் அமைக்கும் வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள் அங்கு தங்க வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. [ஒ-117]

## தேவைக்கு அதிகமாக மருந்துகளைப் பெறாதீர்!

### கிளினிக் நோயாளருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ். போதனா வைத்திய சாலையில் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் தேவைக்கு அதிகமாக மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதை தவிர்த்து தற்போதைய மருந்து நெருக்கடியில் உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் தம்மிடம் உட்கொள்ளுவதற்கு தேவையான மருந்து இருப்பின் அம்மருந்து இருப்பதாக டாக்டரிடம் கூறி பிற மருந்துகளை பெற்றுச் செல்லுமாறு கேட்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கான 3 ஆம் காலாண்டு மருந்து வகைகள் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருந்தும் கப்பல் வசதியின்மையால் அவை எடுத்து வரப்படாமையினால் தற்போது யாழ். வைத்தியசாலையின் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கடமைக்கு திரும்பாத 24 கான்ஸ்டபிள்கள் மீது நீதிமன்றில் பிடியாணை

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இருந்து லீவில் சென்று வேலைக்குத் திரும்பாத 24 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் மீது மட்டக்களப்பு நீதிவான் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

இந்த 24 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். கடந்த ஜனவரி முதல் சொந்த லீவில் சென்ற இவர்கள் பின்னர் கடமைக்கு திரும்பவில்லை. [ஐ]

## வவுனியா மகா கச்சைக் கொடி பொலீஸ் படைப் பிரிவு திடீரென இடமாற்றம்!

வவுனியா மகா கச்சைக் கொடி பகுதியில் பொதுமகன் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து. அப்பகுதியில் இருந்த பொலீஸ் படைப் பிரிவு, செட்டிகுளம் முசல்குத்தி என்னும் இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

மகா கச்சைக்கொடி பகுதியில் வீடு ஒன்றில் தங்கியிருந்த ஸ்ரீபால என்பவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே இப் பொலீஸ் பிரிவு இடம் மாற்றப்பட்டுள்ளது.

[எ-ஐ]

## மட்டக்களப்பில் தேடுதல்

மட்டக்களப்பில் உள்ள மயிலம்பா வெளி, சவுக்கடி ஆகிய கிராமங்களில் ஸ்ரீலங்காப் படையினர் கடந்த புதன்கிழமை பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

சந்தேகத்தின் பேரில் சிலர் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

## வவுனியாவில் மாணவிகள் கைது

திருகோணமலையில் இருந்து வவுனியா சென்ற தமிழ் மாணவிகள் இருவர் வவுனியாவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் ஆண்டு 10 இல் கல்வி பயில்பவர்களாவர்.

வேறொரு மாணவி திருகோணமலை, துவரங்காடு என்ற இடத்தில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மாணவிகள், வவுனியாவில் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## அளவெட்டியில் சிறுவன் காயம்

வீடுபார்க்கச் சென்றவர்களுடன் கூடச்சென்ற சிறுவன் ஒருவன் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

அளவெட்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கறுப்பையா சுரேஷ் [வயது 13] என்ற சிறுவனே படுகாயமடைந்தான். இச்சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-15)

## பிராந்திய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி பேட்டியளித்த போதும் —

அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியதாவது:-

எமது அரசுக்கோ அல்லது வேறெந்தஅரசுகளுக்கோ வடபகுதியில் நிர்வாகம் செலுத்த முடியவில்லை. அங்கு நீதிமன்ற நிர்வாகத்தைக் கூட புலிகளே நடத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ளோர் தெற்கே வரவேண்டுமாயினும் அவர்கள் விசா பெற்றே வரவேண்டும்.

ஆகவே வடபகுதிதற்போது தனிநாடாகவே செயற்பட்டு வருகின்றது.

புலிகளைத் தோற்கடிப்பதாயின் தமிழ் மக்களிடமிருந்து புலிகளைப் பிரிக்க வேண்டும். அதற்காகவே இந்தத் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எமது தீர்வு யோசனையில் தாயகக் கோட்பாடு என்ற கருத்திற்கு எள்ளளவும் இடமேயில்லை. வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும் என அதில் கூறப்படவில்லை.

பிராந்திய சபைகளுக்குச் சொந்தமான காணிகளைப் பராமரிக்கும் அதிகாரம் அச்சபைகளிடம் கையளிக்கப்படும். இருப்பினும் ஒரு வீதியை அல்லது தொழிற்சாலையை அமைக்க ஒருகாணி தேவைப்படின் அதுபற்றி மத்திய அரசு பிராந்திய சபையின் கருத்தை அறியும். ஆனால் அந்தத் தேவைக்கான காணியை பிராந்திய சபை விரும்பாவிடினும் சுவீகரிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு.

பிராந்திய சபைகளுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள அரச காணிகளில் மக்களைக் குடியேற்றும் அதிகாரம் அச்சபைகளுக்கே உண்டு. முதலில் குறித்த மாவட்ட மக்களுக்கும் பின்னர் அந்த மாகாண மக்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆனால் தனியார் காணிகளை யாரும் எங்கும் வாங்குவதற்குத் தடையில்லை. நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எந்தவொரு பிராந்திய சபையாவது ஊறு விளைவிக்க முயலுமாயின் அந்தச் சபையை கலைக்கும் அதிகாரம் மத்திய அரசிற்கு உண்டு.

அத்தகைய சந்தர்ப்பங்களில் எவரின் அனுமதியும் இன்றி ஜனாதிபதி அப்பிராந்திய சபையைக் கலைத்து அதன் அதிகாரங்களை தானே பொறுப்பேற்றுக் கொள்ளலாம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் உத்தேச யோசனைகளில் இந்த விடயம் சேர்க்கப்பட்டிருக்கும்.

நாட்டின் பாதுகாப்பு பற்றிய விடயம் முற்றிலுமாக மத்திய அரசிடமே விடப்படும். பிராந்திய பொலீசார் அதன் எல்லைக்குட்பட்ட சட்டமும் ஒழுங்கும் தொடர்பான விடயங்களைக்கையாள்வர்.

எனினும் அரசுக்கு எதிரான இராணுவத்திற்கு எதிரான சதி முயற்சிகள் பற்றி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மத்திய அரசுக்கே இருக்கும்.

### வெளிநாட்டுக் கடன்

பிராந்திய சபைகள் நேரடியாக வெளிநாட்டு நிதி உதவிகளை மற்றும் கடன்களைப் பெற முடியும். இருப்பினும் இது ஒரு வரையறைக்குள்ளே அனுமதிக்கப்படும். இதற்கு மேலான நிதி உதவிகளைக் கடன்களைப் பெறுவதாயின் மத்திய அரசின் அனுமதி பெறவேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முத

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழம் எங்கள் தாயகம்; அதன் சிறப்பை
நல்லூர் பொருண்மிய கண்காட்சியில் பாருங்கள்

# மரண அறிவித்தல்கள்

## சேகரம்பிள்ளை செல்வரத்தினம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த திரு. சேகரம்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் [13-08-95] ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் செல்வநாதன், [ஓமான்], யோகநாதன், செல்வாநந்தி, [கனடா], செல்வராஜன், [ஜேர்மனி] ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்தா, வனிதாதேவி, விஜயசிறி, ஆகியோரின் மாமனாரும் சிந்துயா, நிரோஷன், சாந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14-08-95] திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ. யோகநாதன்
(மகன்)
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
[38023)

## பொன்னையா இலங்கையர்

(ஓய்வுபெற்ற வருமானவரி மதிப்பீட்டாளர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இலங்கையர் 12 - 8 - 95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா நாகம்மா அவர்களின் மூத்த புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், பரந்தாமன் [அவுஸ்திரேலியா], கிருஷ்ணவேணி, பாலராமன், அரவிந்தன் [கொக்குவில் இந்துக் கல்லூரி], ரூபவேணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பரமேஸ்வரன், மகேஸ்வரன், சரஸ்வதி, சரோஜினிதேவி, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சிவகுமாரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவபாதசுப்பிரமணியம் (ஆசிரியர் - ஐயாக்கிளி) மற்றும் நடராஜா [ஆசிரியர், யாழ் - மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி இ. புவனேஸ்வரி
(மனைவி)
இணுவில் தெற்கு,
[38027]

## திருமதி கிருஸ்ணபிள்ளை ஞானசௌந்தரி

யாழ். நகரை வசிப்பிடமாக கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை ஞானசௌந்தரி 13 - 08 - 95இல் காலமானார். இவர் சசிகரன் [ஜெர்மனி], சிறீகரன் (ஹொலண்ட்), பாஸ்கரன் (ஹொலண்ட்), உதயராஜன் [ஹொலண்ட்], சுதாகரன் (பிரான்ஸ்), த. சாந்தினிதேவி கு. மாலினிதேவி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும் ச. ஆனந்தி (ஜேர்மனி) சி. கௌரி (ஹொலண்ட்), உ. வாணிஸ்ரீ (ஹொலண்ட்) இ. நகுலேஸ்வரன், குணபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ச. சுஜீவன் கு. சாமினி. ந. நிலக்ஷனி ஆகியோரின் பேர்த்தியும் காலம் சென்ற திரு. நா. சரவணபவன் என்பவரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று 14 - 08 - 95 காலை 10 - 00 மணிக்கு 156/3, ஸ்ரான்லி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. நகுலேஸ்வரன்,
[மருமகன்]
156/3, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.
(38024)

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)

சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் [13-8-95] நேற்று மாலை காலமானார்

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மாவின் அருமை மகனும், அன்னபூபதியின் அன்புக் கணவரும், பத்மினி [கனடா), நந்தினி (சுவிஸ்), சாந்தினி [கனடா], குமுதினி [ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ணா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கிருஷ்ண குலசிங்கம் (கனடா), கணேசானந்த மூர்த்தி [சுவிஸ்], கருணாகரன் [கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், திவ்வியா, யசிந்தா, சாரண் [கனடா], நிருபா, பிரவின் [சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாரும், மாணிக்கத்தின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் [14-8-95] இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோண்டாவில் வடக்கு [டிப்போவிற்கு அருகில்] கொட்டைக்காடு மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. அன்னபூபதி
[மனைவி]
சு குமுதினி
[மகள்]
கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
[38028]

தமிழக மீனவர்கள் ஹெலித் தாக்குதலில் படுகொலை

# இந்திய - ஸ்ரீலங்கா அரசுகள் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு!

## பாட்டாளி மக்கள் கட்சி அறிவிப்பு

சென்னை, ஓக. 14

ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலிக்கொப்டர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி ஐந்து தமிழக மீனவர்களைக் கொன்றதைத் தொடர்ந்து, தமிழக மீனவர்களின் உரிமையைப் பாதுகாக்கத் தவறிய சிங்கள—இந்திய அரசுகளுக்கு எதிராக நெதர்லாந்து நாட்டின் தலைநகர் ''ஹெய்க்'' கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்திருக்கிறது.

அக்கட்சியின் தலைவர் பேராசிரியர் தீரன் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

கோடிக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் ஐவரை சிங்களக் கடற்படையினர் குண்டு வீசி கொலை செய்துள்ளமை தமிழக மக்களை கொதித்தெழ வைத்துள்ளது.

1983 இற்குப் பிறகு ஆயிரக்கணக்கான தமிழகமீனவர்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். ஆயிரக்கணக்கான மீன் பிடிப் படகுகள் சிங்களக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 12 வருடங்களில் உலகில் இராணுவத்தினரால் அதிகளவு மீனவர்கள் கொல்லப்பட்டது தமிழகத்தில் தான்.

இதுவரை இந்திய கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த சிங்கள மீனவர்களையோ அல்லது சிங்கள இராணுவத்தினரையோ நமது இந்திய கடற்படை சுட்டுக் கொன்றதாகவோ அல்லது கைது செய்து சிறையில் அடைத்ததாகவோ சம்பவம் நிகழ்ந்தது இல்லை.

அதற்கு எதிர்மாறாக சிங்களக் கடற்படை தமிழக மீனவர்களை கொன்று குவித்து வருகின்றது.

அதற்காக ஸ்ரீலங்காவை இந்திய அரசு அண்மையில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டில் கூட கண்டிக்கவில்லை.

இந்திய மத்திய அரசும் ஸ்ரீலங்கா அரசைப் போல ஒரு தமிழின விரோத அரசு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

ஈழத்தில் நடந்து வரும் போரில் தமிழினப் படுகொலைக்கு சிங்கள இராணுவத்துக்கு உதவும் வகையில் பாகிஸ்தான் ஆயுத உதவி வழங்குகின்றது.

இந்தியாவும் தன் பங்கிற்கு ஈழத் தமிழர்களைக் கொல்லவும் தமிழக மீனவர்களைக் கொல்லவும் சிங்கள இராணுவத்திற்கு பயிற்சி மற்றும் நவீன ஆயுதங்களை வழங்கி வருகின்றது.

ஆனால் பாட்டாளி மக்கள் கட்சி தன் ரத்தங்களான ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் இரத்தம் மற்றும் மருத்துவ பொருள்களை கொடுத்து உதவும்.

மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. ஆரைப் போல தேவை ஏற்படின் தமிழீழ மக்களுக்கு பொருள் உதவி திரட்டித் தரவும் முடிவு செய்துள்ளோம்.

ஈழத் தமிழர்கள் அனாதைகள் அல்லர் என்பதை மத்திய அரசுக்கும் சிங்கள அரசுக்கும் எமது கட்சியின் சார்பில் தெரிவித்து அந்த அரசுகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பிராந்திய சபைகளுக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ வீடமைப்பு மற்றும் கட்டுமானம் சம்பந்தமான அதிகாரங்கள் பிராந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தனிச் சிறப்பான வீடமைப்புத் திட்டங்களை அமைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதன் மூலம் பிராந்திய சபைக்கு வழங்கப்பட்ட வீடமைப்பு அதிகாரத்தை மத்திய அரசு தடை செய்ய முடியும்.

★ சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம் சம்பந்தமான அதிகாரங்கள் பிராந்திய சபைகளுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை—

அந்த அதிகாரங்களை மேவிச் செயற்படக்கூடிய—சுகாதாரத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் தற்போதுள்ள சிறப்புப் பணிகளுக்கான மருத்துவமனைகளை உள்ளடக்கிய தேசிய சுகாதார நிர்வாகம், தேசிய சுகாதார அபிவிருத்திக்கான தரங்கள், மலேரியாத் தடுப்பு போன்ற சகல சிறப்பு திட்டங்களுக்கான நிர்வாகம் போன்றவை தொடர்பான அதிகாரங்கள் முற்றாக மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

★ சிறிய துறைகளும், துறைமுகங்களும் பிராந்திய சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேசமயம் விமானத்தளங்கள், துறைமுகங்கள், சர்வதேச போக்குவரத்துக்கான துறைகள் என்பன மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதன்படி—

வடக்கு- கிழக்கு பிராந்திய சபையின் கீழ் வரும் திருகோணமலை, காங்கேசன் துறை ஆகிய இரு துறைகளும் மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ் வந்துவிடும்.

அதேவேளை—

பருத்தித்துறை துறைமுகத்தை எடுத்துக் கொண்டால்—

சென்னையிலிருந்து வெங்காயம் அல்லது ஏதேனும் பொருள்கள் அத்துறைமுகம் ஊடாக இறக்குமதி செய்ய நேரும் பட்சத்தில், அது சர்வதேசப் போக்குவரத்தாகக் கொள்ளப்பட்டு அத்துறைமுகத்தை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிடலாம்.

★ காணி அதிகாரம் பிராந்திய சபைக்கே என்று கூறப்பட்டாலும் அதிலும் மத்திய அரசு தலையிட பல வழிகள் உள்ளன.

அரசமைப்புச் சட்டப்படி ஜனாதிபதி விரும்பினால் காணிகளைக் குத்தகைக்குக் கொடுக்க முடியும். அது தவிர தேசிய சுற்றுப்புறச் சூழல் பணிகள், தேசிய வீடமைப்புப் பணிகள், உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி போன்ற மத்திய அரசின் கீழ் வரும் தேவைகளுக்காகவும் பிராந்திய சபைகளின் அனுமதியின்றி மத்திய அரசு காணிகளை எடுக்கலாம்.

— இவ்வாறு அந்தத் தீர்வுத் திட்டத்தில் உள்ள பல குறைபாடுகளை தொண்டமானின் இ. தொ. கா. பட்டியல் போட்டுச் சுட்டிக்காட்டியிருப்பதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ)

### பிராந்திய...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டு விடயத்திலும் மத்திய அரசின் கட்டுப்பாடு இருக்கும்.

இந்த நாட்டின் பூகோள எல்லைகள் சிதைவுறாமல் பேணப்படவேண்டுமாயின் கட்டாயமாக அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும். அதிகாரங்கள் பரவலாக்கப்படாவிடின் எமது பூகோள எல்லையைப் பேணுவது கடினம்.

தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது.

#### புலிகளுக்கு அனுப்ப மாட்டோம்

எமது தீர்வுத் திட்டம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்படமாட்டாது. ஏனென்றால் நாங்கள் அவர்களுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம். விடுதலைப் புலிகள் தீர்வுத் திட்டத்தை நிராகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து, வேறுபடுத்தி அதிகாரத்தைப் பரவலாக்குவதே எமது திட்டம்.

ஏனைய பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை விட கூடிய அதிகாரங்களை வடக்கு - கிழக்கு பிராந்திய சபைக்கு வழங்க வேண்டுமென தமிழ் கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன. ஆனால் அவற்றை அரசு முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

எமக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவ உதவிகளை முன்பு வழங்க பின்னடித்த நாடுகள் பல நாங்கள் தீர்வுத் திட்டத்தை முன்வைத்த பின்னர் ஆயுத உதவிகளை வழங்கச் சம்மதித்துள்ளன — என்றார். [உ-6-10]

### அதிசக்தி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கவும் —

யாரோ ஒரு பிரமுகர் செல்லும் வாகனத்துடன் இந்த வாகனை மோதுவதற்கு தற்கொலைப் படையினர் திட்டமிட்டுள்ளனர் என்றும் கருதப்படுவதாகவும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட கொழும்பு நகரப் பொலீசார் நகரில் பல்வேறு வீதிகளில் வீதித் தடைகளைப் போட்டு சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் மேல் மாகாண முதலமைச்சரின் செயலக வாசலில் குண்டை வெடிக்க வைத்தவரிடம் 10 குண்டுகள் இருந்ததாகவும் —

அவற்றில் 5 குண்டுகள் இளநீர் வண்டியில் இணைக்கப்பட்டன எனவும் —

பொலீசாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

### தேவாலயம்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமானம் வீசிய குண்டுகளினால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் தேவாலயம் சிறுசேதங்களுக்கே உள்ளானதாக புகைப்படங்களுடன் இங்கு விளக்கம் கூறப்படுகின்றது. — என்றார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு பாரபட்சமாக நடப்பதாக சொல்லப்படுவதையும் அவர் மறுத்தார் என்று ''புலிகளின் குரல்'' அறிவித்தது. [உ-4]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.